www.ecourtsindia.com



| வழக்கு எண். | OS No.108/2024 | | |
|---|---|---|---|
| சாட்சி | வாதி தரப்பு (PW1) | 1 | |
| பெயர் | கோவிந்தன் | தொழில் | |
| த/பெ. | நடேசன் | மதம் | |
| ஊர் | உளுந்தூர்பேட்டை | வயது | |
| தாலுக்கா | உளுந்தூர்பேட்டை | | |

2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 08-ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டு 10 வது விதியின் எற்பாட்டின் படி, திரு.V.ஆறுமுகம்,B.L., சார்பு நீதிபதி, உளுந்தூர்பேட்டை அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி அளிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணை வாக்குமூலத்தை எழுத்து மூலமான ஆணையுறுதி ஆவணமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானது என உறுதி கூறி கையெழுத்து செய்துள்ளேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்கண்டவற்றை தாக்கல் செய்கின்றேன்.

1. 17.11.2022 தேதியிட்ட ஆவண எண்.3065/2022 ஆக பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் (சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல்) - **வா.சா.ஆ.1 ஆகும்.**

2. 18.12.2023 தேதியிட்ட ஆவண எண்.3388/2023 ஆக பதிவு செய்யப்பட்ட கிரைய உடன்படிக்கை (அசல்) - **வா.சா.ஆ.2 ஆகும்.** ( 8 தாள்களை கொண்டது)

3. 20.01.2024 தேதியிட்ட அய்யனார் என்பவர் பெயரில் ஏற்பட்ட இறப்பு சான்றிதழ் (நகல்)- **வா.சா.ஆ.3 ஆகும்.**

4. 01.04.2024 தேதியிட்ட வாதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு (அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன் கூடியது) - **வா.சா.ஆ.4 ஆகும்.**

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNKA0E0001852024/truecopy/order-1.pdf

www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com



5. வாதி அறிவிப்பை 1-ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சலக உறை - **வா.சா.ஆ.5 ஆகும்.**

6. வாதி அறிவிப்பை 2-ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சலக உறை - **வா.சா.ஆ.6 ஆகும்.**

7. வாதி அறிவிப்பை 3-ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சலக உறை - **வா.சா.ஆ.7 ஆகும்.**

வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதி தரப்பு கோரிக்கையை ஏற்று குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNKA0E0001852024/truecopy/order-1.pdf